


# முகிழ்

சிறுவர் வாசிப்பு வட்டம்

வலிகாமம் தெற்கு பிரதேச சபை

பொது நூலகம்

சுன்னாகம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முகிழ்

## இதழ் 03



சிறுவர் வாசிப்பு வட்டம்

பொது நூலகம்

வலிகாமம் தெற்கு பிரதேச சபை

சுன்னாகம்

2024

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எங்கள் எண்ணக்கருக்கள்

சிறுவர் வாசிப்பு வட்டத்தின் 3வது “முகிழ்” சஞ்சிகையினூடாக உங்களை சந்திப்பதில் பெருமகிழ்வு அடைகின்றோம். சுன்னாகம் பொது நூலக சிறுவர் வாசிப்பு வட்டம் 12.11.2021 ஆரம்பமாகி இன்று வரை செயற்பட்டுக் கொண்டிருக்கின்றது. சிறார்களின் பல்வகையான திறமைகளை வெளிக் கொணரும் முகமாக தமது சுய ஆக்கங்களை தாங்கி வெளிவரும் சஞ்சிகையாகும். சிறார்களிடையே வாசிப்பை மேம்படுத்தும் முகமாகவும், அவர்கள் மூலமாக மற்றைய சிறார்களையும் வாசிப்பின் முக்கியத்துவத்தினை ஏற்படுத்தவும் எங்கள் முயற்சியாகும். இச் சஞ்சிகையின் மூலம் சிறார்கள் தமது ஆக்கங்களை நூல் வடிவில் பார்வையிட்டு வாசிக்கும் போது அவர்களுக்குள் பெருமிதமும் மகிழ்வும் ஏற்படுவதை அவதானிக்க கூடியதாகவுள்ளது. தொடர்ந்தும் எமது சிறார்கள் வாசிப்பு கலாசாரத்திற்குள் நின்று சமூகத்தினை நல்வழிப்படுத்தும் பிரஜைகளாக மாற்றுவதற்கு நாமும் உறுதுணையாக நின்று வழிப்படுத்துவோம்.







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிறுவர் வாசிப்பு வட்டம்

சிறு வயதிலேயே சிறுவர்களிடம் வாசிப்பை அறிமுகப்படுத்தி மேம்படுத்த வேண்டும் எனும் நோக்கில் சுன்னாகம் பொது நூலகத்தில் 12.11.2021 அன்று சிறுவர் வாசிப்பு வட்டம் ஆரம்பித்து வைக்கப்பட்டது. இவ் வாசிப்பு வட்டமானது வாசிப்பை மேம்படுத்துவதுடன் நின்றுவிடாது சிறுவர்களிடம் நிர்வாகத் திறனையும் உருவாக்கும் முகமாக தலைவர், செயலாளர், பொருளாளர் எனச் சிறுவர் நிர்வாகத் தெரிவுகள் மேற்கொள்ளப்பட்டு அவர்களே நிர்வாகத்தினையும் திறம்பட நடாத்திச் செல்கின்றனர்.

இவ் வாசிப்பு வட்டச் செயற்பாடுகள் ஒன்றுவிட்ட ஒரு வெள்ளிக்கிழமைகளில் சிறுவர்கள் ஒன்றுகூடி நூல்கள் வாசித்தல், நூல் விமர்சனம் செய்தல், பாட்டுப் பாடுதல், கவிதை சொல்லல், விடுகதை, பொது அறிவு வினாக்களை வினாவி விடை காணுதல் எனப் பல்வேறு நிகழ்வுகள் நடைபெறுகின்றன. இச் செயற்பாட்டால் மேடைக் கூச்சம், தயக்கம் என்பன நீங்கப்பெற்று எதற்கும் தயாராகும் பயிற்சி அனுபவம் கிடைக்கின்றது. மேலும் சிறுவர்களை உற்சாகமூட்டும் வகையில் விளையாட்டுக்களும் இடம்பெறுகின்றன. இத்தகைய செயற்பாடுகளை தொடர்ந்து செயற்படுத்தி வாசிப்புடன் எதிர்கால எழுத்தாளர்கள், கவிஞர்கள், பேச்சாளர்கள், ஓவியர்கள் எனப்பலரையும் இனங்கண்டு வெளிக்கொணர்வதும் எமது நோக்கமாகும். இன்றைய நெருக்கடியான காலகட்டத்தில் சிறார்களை வாசிப்பில் ஈடுபடுத்துவதற்காக சனசமூகங்களுடன் இணைந்து வாசிப்பு முகாம்களை இவ் வருடத்தில் ஆரம்பித்துள்ளோம். அத்துடன் பாடசாலைகள் தோறும் சென்று இலவச அங்கதுவத்தினை அதிகரிக்கும் செயற்பாடுகளையும் செய்து வருகின்றோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிறுவர் வாசிப்பு வட்ட நிர்வாகம்

| | | |
|---|---|---|
| 01. | ச.அபிராம் | தலைவர் |
| 02. | வி.ஆருஜன் | உப தலைவர் |
| 03. | தி.கஜனன் | செயலாளர் |
| 04. | பா.விஸ்மிதன் | பொருளாளர் |
| 05. | பா.ஜஸ்வின் | உறுப்பினர் |
| 06. | கு.டக்சின் | உறுப்பினர் |
| 07. | இ.டிலுக்ஷன் | உறுப்பினர் |
| 08. | அ.அக்ஷியா | உறுப்பினர் |
| 09. | ஜெ.ஆதீஷ் | உறுப்பினர் |
| 10. | ச.மதுமிலன் | உறுப்பினர் |
| 11. | ச.ஷஞ்சனா | உறுப்பினர் |
| 12. | ச.அனிகா | உறுப்பினர் |
| 13. | த.ஆரணன் | உறுப்பினர் |
| 14. | த.அவதாரணன் | உறுப்பினர் |
| 15. | சே.அவனீஷ் | உறுப்பினர் |
| 16. | இ.பைரவி | உறுப்பினர் |
| 17. | ம.திவிசரன் | உறுப்பினர் |
| 18. | தி. ஆரதி | உறுப்பினர் |
| 19. | செ.சக்சிதா | உறுப்பினர் |
| 20. | நி.வேதாக்ஷன் | உறுப்பினர் |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொருளடக்கம்


| | | |
|---|---|---|
| 1. | இயற்கையைப் பாதுகாப்போம் | 1 |
| 2. | எனது செல்லப் பிராணி | 2 |
| 3. | எனது பொழுதுபோக்கு | 3 |
| 4. | காலைக்காட்சி | 4 |
| 5. | சிறுவர் நூலகம் தரிசித்திட வாரீர் | 6 |
| 6. | செயற்கை நுண்ணறிவு ( AI ) | 8 |
| 7. | தமிழ் மொழி | 9 |
| 8. | பச்சைக் கிளி | 10 |
| 9. | பொது அறிவு | 11 |
| 10. | பொலித்தீன் அற்ற சூழலை உருவாக்குவோம் | 12 |
| 11. | மரங்களை வளர்ப்போம் | 13 |
| 12. | நான் விஞ்ஞானியானால்... | 14 |
| 13. | நீரின் பயன்கள் | 15 |
| 14. | விடுகதைகள் | 16 |
| 16. | வீதி விபத்துக்கள் | 17 |
| 17. | சிறார்களின் கைவண்ணம் | 18 |


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இயற்கையைப் பாதுகாப்போம்

மனிதர்களாகிய நாம் இவ்வுலகில் வாழ வழிவகுப்பதே இயற்கை ஆகும். இதனால் தான் நம் இளைஞர்கள் இயற்கையோடு வாழ்ந்து இயற்கையை தெய்வமாக வழிபட்டனர்.நாம் உண்பதற்கு உணவும்,சுவாசிப்பதற்கு ஒட்சிசன் வாயுவும் ஓய்வெடுப்பதற்கு நிழலையும், தளபாடங்களான மேசை, கதிரை செய்வதற்கு மரங்களும் மற்றும் குடிப்பதற்கு நீரும் இந்த இயற்கை நமக்கு தருகிறது. எமக்கு மழை வேண்டுமென்றாலும் இயற்கை வளங்களான மரம் செடி கொடிகளே உதவுகின்றன.

இயற்கையை நாம் பாதுகாத்தால் தான் இயற்கை எம்மைப் பாதுகாக்கும். ஆனால் தற்காலத்தில் மானிடர்கள் இயற்கையை பாதுகாக்கின்றனரா என்று கேட்டால் அவர்கள் பாதுகாக்கவில்லை. இவ் இயற்கையை நாம் மறைமுகமாகவோ நேர்முகமாகவோ அழிக்கின்றோம். நாம் சுவாசிக்கும் தூயவளியானது எமது செயற்பாட்டால் தான் மாசுஅடைகிறது. அதாவது குப்பைகளையும் தேவையற்ற பிளாஸ்ரிக் போத்தல்களையும் எரிக்கிறோம். இதனால் வெளிவரும் வாயுவானது நாம் சுவாசிக்கும் தூயவளியை அசுத்தமாக்குகிறது. வெப்பகாலங்களில் எமக்கு நல்ல நிழலை தரும் பல விசாலமான மரங்களை ஏதேதோ தேவை கருதி நாம் வெட்டுகிறோம். நீரின்றி எம்மால் உயிர்வாழ முடியாது. ஆனாலும் நாம் நீர்கிடைக்கும் முதல்களாக நன்னீர் நிலைகளில் குப்பைகளை கொட்டி அந்த நீரை எதற்கும் உதவாமற்செய்கிறாம். இவ்வாறு பல செயற்பாடுகளால் இயற்கையை நாம் அழிவிற்குட்படுத்துகிறோம். இயற்கையை நாம் பாதுகாக்காமல் அழிப்பதால் இயற்கை தன் கோபத்தை இயற்கை அனர்த்தங்களான சுனாமி, சூறாவளி, வெள்ளப்பெருக்கு என்பவற்றால் வெளிப்படுத்துகிறது. நாம் செய்யும் இத்தவறானது நம்மை மட்டுமன்று நம் எதிர்கால சந்ததியினரையும் பாதிக்கிறது.

நாம் இந்த பேரழிவிலிருந்து எம்மை பாதுகாக்க வேண்டுமெனில் முதலில் இயற்கையை நம் உயிர் போல் பாதுகாக்க வேண்டும். இவ் இயற்கையை நாம் பாதுகாக்கும் வழிமுறைகளாவன, குப்பைகளை எரிக்காது அவற்றை மீள் சுழற்சிக்கு உட்படுத்தல். இருக்கும் மரங்களை பாதுகாத்து மற்றும் பல்வேறுபட்ட மரங்களை நட வேண்டும். இயற்கை நீர் வளங்களை மாசுபடாமல் காக்கவேண்டும். இச் செயற்பாடுகளை நாம் செய்வதால் எமக்கு ஏற்படும் அழிவிலிருந்து எம்மை பாதுகாக்கமுடியும். மற்றும் எமது எதிர்கால சந்ததியினரையும் பாதுகாக்கலாம்.



**தி.கஜனன்**

**தரம் - 09**

**யா/கொக்குவில் இந்து கல்லூரி**





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எனது செல்லப் பிராணி

எனது செல்லப் பிராணி ஒரு நாய் ஆகும். அது மண் நிறமானது அதனை நான் வீரா என்று அழைப்பேன். அதற்கு தற்போது ஐந்து வயது ஆகிவிட்டது. மீன், இறைச்சி என்றால் வாலை ஆட்டி ஆட்டி விருப்பமாய் உண்ணும். என்னுடன் பந்து விளையாடும். அதற்கு என்னுடன் விளையாட நல்ல விருப்பம். நான் பாடசாலை விட்டு வரும் போது, தூர வரும் போதே என்னைக் கண்டு பிடித்துவிடும். எனது குட்டித் தங்கையை அடிக்கடி சென்று எட்டிப் பார்க்கும். எனது வீராவை எனக்கு மிகவும் பிடிக்கும்.

**சே.அவனீஷ்**

**தரம் 03**

**யா/ மகாஜனாக் கல்லூரி**





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எனது பொழுதுபோக்கு

எனது பெயர் ஜெ.ஆதீஷ். நான் யா/உடுவில் மகளிர் கல்லூரியில் தரம் மூன்றில் கல்வி கற்கின்றேன். எனது பொழுது போக்கு சித்திரம் வரைதலாகும். நான் முன்பள்ளியில் கல்வி கற்கும் போதே அதாவது நான்கு வயதில் இருந்தே சித்திரம் வரைந்து வருகின்றேன். சித்திரம் வரைவது எனக்கு விருப்பமான ஒன்றாகும். கற்றல் நேரங்கள் தவிர்ந்த ஏனைய நேரங்களில் சித்திரம் வரைவதே எனது பொழுது போக்காகும். சித்திரம் வரையும் போது எனது மனம் மகிழ்ச்சியடையும். வலிகாமம் தெற்கு பிரதேச சபையின் சுன்னாகம் பொது நூலகத்தில் நடைபெற்றுக் கொண்டிருக்கும் சித்திர வகுப்பில் நானும் பயின்று கொண்டிருக்கின்றேன். எதிர்காலத்தில் ஓவிய கலைஞனாக வரவேண்டும் என்பது எனது விருப்பமாகும்.



**ஜெ.ஆதீஷ்**

**தரம் 03**

**யா/உடுவில் மகளிர் கல்லூரி**







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காலைக்காட்சி

நம் கண்ணுக்கு விருந்தளிக்கும் காட்சிகளுள் காலைக்காட்சியும் ஒன்றாகும். இரவெல்லாம் இவ்வுலகை சூழ்ந்திருந்த கருமையை விரட்டி ஆகாயத்தின் கிழக்குப்பக்கம் கதிரவன் உதித்தெழுந்து இப்பூமிப்பரப்பை தன் கதிர்களால் அரவணைத்துக் கொள்ளும் ரம்மியமான பொழுதே காலைப்பொழுதாகும்.

ஆலய மணியின் ஓசை மாறிமாறி ஒலிக்கின்றது. சேவல்கள் கூவும் ஓசை விடியலின் வரவை காட்டி நிற்கின்றன. மெல்ல மெல்ல பொழுது புலர இருள் அகல்கின்றது.

மறுநாள் கடமைகளை ஆவலோடு தொடங்க மாந்தர் துயிலெழுகின்றார்கள். பெரியவர்கள் காலைக்கடன்களை முடித்து தமது வீட்டு வேலைகளை செய்யத் தொடங்குகின்றார்கள். மாணவச் செல்வங்களும் காலைக்கடன்களை முடித்து கடவுளை வணங்கி பாடம் படிக்கின்றார்கள்.

இருள் அடர்ந்திருந்த இடங்களில் எல்லாம் சிறிது சிறிதாக ஒளி படர்வதை பார்க்கும் போதே மனதிற்குள் உற்சாகம் ஊற்றெடுக்கும். கூடுகளில் அமர்ந்திருந்த புள்ளினங்கள் இரை தேடுவதற்காக கூட்டம் கூட்டமாக வானத்தில் பறந்து கொண்டிருக்கும்.

அழகான சோலைகளில் அழகிய புதுமொட்டுக்கள் பூவாக மலர்ந்து மணம் பரப்புகின்றன. அந்த அழகிய மலர்களை நோக்கி வண்டுகளும் தேனீக்களும் தேன் குடிக்க பறந்துவரத் துவங்கும்.

மண்ணிலே முளைத்த பச்சை செடிகள் காலைப்பொழுது கண்டு துளிர்க்கின்றன. பூமியில் படர்ந்து கிடந்த பனித்துளிகள் மெல்ல மெல்ல உருகி வெளிச்சத்தை பரப்புகின்றன.

வயல்களை நோக்கி செல்லும் உழவர்கள், கடலை நோக்கி செல்லும் மீனவர்கள், அலுவலகங்களை நோக்கி செல்லும் ஊழியர்கள், வியாபார நிலையங்களுக்கு செல்லும் வியாபாரிகள் போன்றோர் தம் கடமைகளை செய்ய புறப்பட்டு செல்கின்றனர்.

நாட்டின் எதிர்காலத் தூண்களான மாணவ மணிகள் பாடசாலைக்கு செல்ல ஆயத்தமாகின்றார்கள். தெருக்களில் சனநடமாட்டம் அதிகரிக்கின்றது. சூரியன் சந்திரன் கூட ஒழுங்குமுறையாக இயங்கவேண்டுமென்பதை உணர்த்தும் காலை அனுபவங்கள் எங்களுக்கு இன்பம் பயப்பனவாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நல்ல துவக்கம் புதிய முயற்சி என எல்லா விடயங்களையும் ஆரம்பிக்கின்ற நல்லதோர் காட்சியாக காலைப்பொழுது அமைகின்றது. இந்த காலைக்காட்சியின் அழகை விரும்பாதவர்கள் யாரும் இருக்கவே முடியாது எனும் அளவிற்கு இயற்கையின் வரமாக விளங்குகின்றது. மனதிற்கு உற்சாகமளிக்கின்ற இந்த காலைப்பொழுதில் பல ஆக்கபூர்வமான சிந்தனைகளோடு அந்த நாளினை வரவேற்போம்.




ச.மதுமிலன்

தரம் - 4

யா/மகாஜனாக் கல்லூரி





ச.சஞ்சனா

தரம் 01

யா/மகாஜனாக்கல்லூரி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிறுவர் நூலகம் தரிசித்திட வாரீர்

சிறுவர்கள் நம் ஆக்கங்கள் தாங்கி
சிறப்பாய் வெளிவரும்
முகிழ் சஞ்சிகைக்கு எனது
முதற்கண் வாழ்த்துக்கள்

கவிஞன் நானில்லை ஆனால்
கவிதை எழுத காதல் கொண்டேன்
கன்னிக்கவிதை இது
கருத்துப்பிழை பொறுத்தருள்வீர்

நூலகம் எனக்குப் பிடித்த இடம்
நூல்கள் எனக்குப் பிடித்த பொருள்
வாரத்தில் இருமுறையேனும் அதன்
வாசல்வழி சென்றிடுவேன்

கதைப்புத்தகங்கள், சஞ்சிகைகள், கவிதைகள்
கட்டுரைகள், கருத்துள்ள பல நூல்கள்
வாசிப்பதால் கல்வி அறிவை உயர்த்திடும்


சித்திரங்கள், ஆக்கங்கள்
சின்னச் சின்ன விளையாட்டுப் பொருட்கள்
சிறுவர்கள் எமக்கு நுண்ணறிவு வளர்த்திடுமே
மனமகிழ்வை தந்திடுமே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இணையவழி தகவல் பெற
இனிமையாய் பொழுது போக்க
தொழில்நுட்ப அறிவு வளர்க்க
கணனிகளும் இங்குண்டு

இத்தனை இன்பம் தரும்
நூலகங்கள் தேடிச்சென்று
ஓய்வு நேரத்தையும்
உன்னதமாய் கழித்திடுவோம் வாரீர்....



**நி.வேதாக்ஷன்**
**தரம் 03**
**யா/ஸ்கந்தவரோதயா ஆரம்ப பாடசாலை**





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# செயற்கை நுண்ணறிவு ( AI )

மனிதர்களாகிய நாம் பல்வேறு யுகங்களை கடந்து சென்றிருக்கின்றோம். தற்போது நாம் வாழ்கின்ற யுகமானது Artificial Intelligence அதாவது செயற்கை நுண்ணறிவு யுகம். இவ் யுகத்திலே பேசுபொருளாக கருதப்படுவது செயற்கை நுண்ணறிவு ( AI )

எந்திர அல்லது முறைசாரா பகுத்தறிவு பற்றிய ஆய்வு பண்டைய காலத்தில் மெய்யியலாளரும் கணிதவியலாளரும் தொடங்கியது ஆகும். பின் செயற்கை அறிதிறன் ஆராய்ச்சித்துறை 1956 ஆம் ஆண்டில் Dartmouth கல்லூரியில் ஒரு பணிப்பட்டறையில் நிறுவப்பட்டது. இந்த பட்டறையில் கலந்துகொண்டோர் 1960 களில் AI துறையில் வல்லுனராயினர். இப்படிப்பட்ட AI தொழிநுட்பம பொருளாதார வீழ்ச்சியையும் கண்டது பின்னர் பலரின் கடின உழைப்பால் AI தொழில்நுட்பம் சரிவிலிருந்து மீண்டு எழுச்சியைக் கண்டது

எந்திர கற்றல் தொழில்நுட்பம் 2020 இன் பெரும்பாலான இன்றியமையாத பயன்பாடுகளில் பயன்பட்டது. 11 மே 1997 அன்று உலகச் சதுரங்கச் சம்பியனான கேரி காசப்ரோவை வீழ்த்திய முதல் கணினிச் சதுரங்க விளையாட்டு அமைப்பாக செ.நு ஆக்கமானது டீப் ப்ளூநிரல் ஆனது. அது மட்டுமல்லாமல் ஓவியங்களை வரைய, வீட்டை சுத்தம் செய்ய, வாகனம் செலுத்த, இப்படி பல்வேறுபட்ட மனித தேவைகளை பூர்த்தி செய்ய AI தொழில் நுட்பம் பயன்படுகின்றது.

இவ்வாறு AI தொழிநுட்பத்தை பயன்படுத்தி எமது தேவையை பூர்த்தி செய்து வாழ்வில் மகிழ்ச்சியாக வாழ்வோமாக!



**ச.அபிராம்**

**தரம் 08**

**யாழ் இந்துக்கல்லூரி**






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ் மொழி

- 🕮 தமிழ் எங்கள் தாய் மொழி
- 🕮 தமிழ் இனிமையான சிறந்த மொழி
- 🕮 தமிழ் உலக மொழிகளுள் ஒன்று
- 🕮 தமிழ் மொழி பேசுவோர் உலகெங்கும் உள்ளனர்
- 🕮 தமிழ் மொழி எங்கள் உயிர் போன்றது
- 🕮 தமிழ் மொழிக்கு அமுது என்று பெயர்
- 🕮 தமிழ் மொழியைக் கற்பது நமது கடமை
- 🕮 தமிழ் வளர நாம் வளர்வோம்
- 🕮 தமிழை வளர்த்திட நாம் முயல்வோம்
- 🕮 தமிழராக நாம் என்றும் வாழ்வோம்



**ச.அனிகா**

**தரம் - 04**

**யா/யாழ் இந்து ஆரம்ப பாடசாலை**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பச்சைக் கிளி

பச்சை நிறக் கிளியே
பஞ்சு போன்ற கிளியே
பனை மரத்துக் கிளியே
பாலும் சோறும் உண்ணவா

மனிதன் போல பேசுவாய்
மரப் பொந்தில் வசிப்பாய்
கீகீ கீகீ என்றே
உன் குஞ்சுகளை கூப்பிடுவாய்

தெய்வம் படைத்த வரமே
தேவதை அழகு பெறுவாய்
மா மரத்தில் இருந்து
மாம் பழத்தை உண்ணுவாய்

எட்டி உன்னைப் பிடித்தால்
எட்டப் பறந்து போவாய்
வானை சுற்றிப் பறப்பாய்
வான வில்லைத் தொடுவாய்



**பா.விஸ்மிதன்**
**தரம் 08**
**யா/ஸ்கந்தவரோதயாக் கல்லூரி**





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொது அறிவு

1. பாம்பாட்டி ஊதும் இசைக்கருவி ?

   **மகுடி**

2. உடைகளைத் தைக்க அளவு எடுக்கப் பயன்படுத்துவது?

   **அளவு நாடா**

3. கிழங்குகளில் அதிகம் உள்ள போசணை?

   **மாப்பொருள்**

4. அன்னாசி கூடுதலாக பயிரிடப்படும் இடம்?

   **களுத்துறை**

5. றம்புட்டானுக்கு பிரசித்தமான இடம்?

   **மல்வானை**

6. மங்குஸ்தானுக்கு பிரசித்தமான இடம்?

   **கம்பஹா**

7. இலங்கையில் 24 மணி நேரமும் இயங்கும் அரச நிறுவனங்கள்?

   **வைத்தியசாலை , இராணுவம், பொலிஸ், விமான நிலையம்**

8. இலங்கையின் இறுதி இராசதானி?

   **கண்டி**

9. வெள்ளைப் பிரம்பு வைத்திருப்போர்?

   **கண்பார்வை அற்றவர்கள்**

10. ஞாபக சக்தி கூடிய மிருகம்?

   **யானை**



**கு. டக்சின்**

**தரம் 04**

**யா/ ஏழாலை மேற்கு சைவசன்மார்க்க வித்தியாசாலை**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொலித்தீன் அற்ற சூழலை உருவாக்குவோம்

பொலித்தீனும் பிளாஸ்ரிக்கும் உக்கி அழிவதில்லை. இதனால் சூழலுக்கும் கால நிலைக்கும் ஆரோக்கியத்திற்கும் பாதிப்பு ஏற்படுகிறது. பிளாஸ்ரிக், பொலித்தீன் கழிவுக்கும் நிலத்திற்கும் நிலத்தடி நீரிற்கும் ஆறு, குளம், வாவி, ஏரி, கடல் போன்ற நிலைகளுக்கும் வளி மண்டலத்திற்கும் அச்சுறுத்தலாக உள்ளது. மனிதர்கள் மாத்திரமன்றி விலங்குகள், நீர்வாழ் உயிரினங்கள், தாவரங்கள் போன்றவற்றிற்கும் பாரிய அச்சுறுத்தலாக உள்ளது.

பிளாஸ்ரிக், பொலித்தீன் என்பவற்றால் புற்றுநோய் ஏற்படுகின்றது. பிளாஸ்ரிக் துகள்களால் குழந்தைகள் குறைபாட்டுடன் பிறக்கின்றன. புவி வெப்பமடைதல்,காலநிலை மாற்றம்,வெள்ளப்பெருக்கு, மண்சரிவு, நிர் தேங்கி நின்று கிருமிகள் நுளம்பு, ஈ பெருக்கம் ஏற்பட்டு நோய்கள் எம்மை ஆக்கிரமிக்கின்றது.

மேலும் நிலக்கீழ் நீர்வளம் குறைந்து செல்கின்றது. இப் பொலித்தீன்களை விலங்குகள் உண்பதால் அவற்றின் குடலினுள் சிக்கி சடுதியாக விலங்குகள் இறக்கின்றன. நாளாந்தம் எமது நாட்டில் பொலித்தீன் பாவனை அதிகரித்து வீதி வீதியாக பொலித்தீன்கள் பறந்து செல்கின்றன.

எனவே இந்தப் பூமிக்கும் எமக்கும் அழிவை ஏற்படுத்தும் பொலித்தீன், பிளாஸ்ரிக் பாவனையைத் தவிர்த்து பொலித்தீன் அற்ற சூழலை உருவாக்குவோம்.



**வி. ஆருஜன்**
**தரம் - 7**
**யா/யாழ். இந்துக் கல்லூரி**





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரங்களை வளர்ப்போம்

மரங்கள் எமது வாழ்வில் மிகமிக முக்கியமானவை. அம்மரங்கள் இன்றி உயிர் அங்கிகள் வாழமுடியாது. இவை எமக்கு சுத்தமான வளி, காய், கனி மற்றும் ஒட்சிசனை அளிக்கின்றன. இவை இயற்கை அன்னை எமக்கு அளித்த நன்கொடையாகும். மரங்கள் சிறந்த நண்பனை விட மேலானவை மரங்கள் செய்யும் உதவிக்கு அளவே இல்லை மரங்கள் வெப்பத்தை குறைத்து தணிந்த நிழலை அளிக்கிறது.

இவற்றை நாம் எமது கண்களை போல் பாதுகாக்க வேண்டும். இவற்றின் இலை, குழைகள் மற்றும் விதைகள் பிராணிகளுக்கு உணவாகின்றன. அது மட்டுமன்றி வேப்பமரப் பழத்தைக் கொண்டு வடகம் எண்ணெய் என்பவற்றை பெறலாம். மரங்கள் மூலம் பல பொருளாதார நன்மைகளையும் பெறலாம். மரங்களை வெட்டி விறகுகளையும் பெறலாம். ஆனால் நாம் மரங்களை வெட்டக்கூடாது அல்லவா அதனால் ஒரு மரத்தை வெட்டும்போது இரண்டு அல்லது மூன்று மரங்களை நட வேண்டும். மரங்கள் மண்ணரிப்பையும் தடுக்கின்றன. வீடு கட்டுவதற்கு தேவையான பொருட்களை பெறலாம். பல தளபாடங்களையும் உற்பத்தி செய்யலாம். காட்டிலுள்ள மரங்கள் மட்டுமன்றி வீதியோரங்களில் காணப்படுகின்ற மரங்களும் மழைவீழ்ச்சியை அளிக்கின்றன.

தென்னை மரத்திலிருந்து தேங்காய் இளநீர் என்பவற்றை பெறலாம் நம் நாட்டு வளத்தில் மரங்கள் மிகமுக்கியமானவை. மரங்கள் நாட்டிற்கு அழகையும் செழிப்பையும் கொடுக்கின்றன. பறவைகள் இல்லிடம் அமைக்க மரங்கள் உதவுகின்றன. பூக்களிலிருந்து தேனை சேகரிப்பதற்கும் மரங்கள் உதவுகின்றன. எதிர்கால சந்ததியினர் பயன் அடைய நாம் இப்பொழுதே மரங்கள் வளர்க்க வேண்டும். நாம் மரங்களை வளர்த்து நாட்டின் வளத்தை பெருக்குவோம்.



**செல்வி தி.ஆரதி**

**தரம் 6**

**யா/வேம்படி மகளிர் கல்லூரி**





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நான் விஞ்ஞானியானால்...

01. இன்றைய உலகம் விஞ்ஞான உலகமாக விளங்குகின்றது.

02. இந்த உலகில் விஞ்ஞானம் கலவாத கண்டுபிடிப்புகள் எதுவும் இல்லை என்ற நிலை உருவாகிவிட்டது.

03. எனவேதான் நான் விஞ்ஞானியாக வாழ விரும்புகிறேன்.

04. நான் விஞ்ஞானியானால் நாட்டிற்குப் பெருமை தரும் ஆய்வுகளில் ஈடுபடுவேன்.

05. நாட்டின் முன்னேற்றத்துக்குப் பயன் தரத்தக்க கருவிகளைக் கண்டறிய முயற்படுவேன்.

06. புதிய சாதனைகளை நிலைநாட்டும் குறிக்கோளுடன் செயற்படுவேன்.

07. விஞ்ஞானம் மனித குலத்திற்கு ஆக்கபூர்வமான பயன்தரும் பணிகளுக்கே பயன்படவேண்டும் என்ற இலட்சியத்துடன் உழைப்பேன்.

08. அழிவுகளை ஏற்படுத்தும் நாசகாரக் கணைகளை உற்பத்தி செய்யும் நிலையினை மாற்றிட முயல்வேன்.

09. ஆக்கபூர்வமான பணிகளுக்கு விஞ்ஞானத்தைப் பயன்படுத்திட முயற்சிப்பேன்

10. நான் விஞ்ஞானியானால் நாட்டிற்குப் பெருமை தரும் சாதனைகளை நிகழ்த்திட அயராது உழைப்பேன்.



**த.ஆரணன்**

**தரம் 04**

**யா/பொஸ்கோ வித்தியாலயம்**





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நீரின் பயன்கள்

"**நீரின்றி அமையாது உலகு**" என்று வள்ளுவப்பெருமான் திருக்குறளில் வான்சிறப்பு என்ற அதிகாரத்தில் குறிப்பிட்டுள்ளார். இவ்வுலகில் நீரானது வரையறுக்கப்பட்ட ஒரு வளமாகும். நீர் இல்லாவிட்டால் நாம் உயிர் வாழ முடியாது.

நீரின் மூலம் நாம் பல நன்மைகளை பெறுகின்றோம். நாம் எமது அன்றாட வாழ்வில் நீரைப் பயன்படுத்தி வருகின்றோம். சமைத்தல், குளித்தல், குடித்தல், ஆடைகள் கழுவுதல், வீடு கழுவுதல் போன்றன இதற்கு உதாரணங்களாகும். நீர்மின் உற்பத்தி, போக்குவரத்து போன்ற பல தேவைகளுக்காக நீரை நாம் பயன்படுத்தி வருகின்றோம்.

நீரானது பல முறைகளில் மாசடைந்து கொண்டும் வீணாகிக் கொண்டும் வருகின்றது. நீர் நிலைகளில் குப்பை கூழங்களை கொட்டுதல், நீர் நிலைகளில் தொழிற்சாலை கழிவுகளை விடுவித்தல், விலங்குகளை நீர் நிலைகளில் குளிப்பாட்டல், இறந்த விலங்குகளை நீருக்குள் எறிதல் போன்ற மனித செயற்பாடுகள் காரணமாக நீரானது மாசடைந்து கொண்டு வருகின்றது.

நாம் நீரைப் பல முறைகளில் வீணாக்கிக் கொண்டு வருகிறோம். தேவைக்கதிகமாக நீரைப் பயன்படுத்தல், நீர்க்குழாயை திறந்து விட்டு ஒழுங்காக பூட்டாமல் விடுதல், நீரை வீணாகத் தரையில் ஊற்றுதல் போன்ற செயற்பாடுகளால் நீர் வீணாகிக்கொண்டு வருகின்றது.

மாசடைந்த நீரைப் பருகுவதால் எமக்கு பல நோய்கள் ஏற்படுகின்றது. நெருப்புக்காய்ச்சல், வாந்திபேதி போன்ற நோய்கள் ஏற்பட்டு வருகின்றன.

எமக்கு பல நன்மைகள் செய்து வருகின்ற நீரை நாம் வீணாக்காமல் சிக்கனமாக பயன்படுத்த வேண்டும். அதேவேளை நீரை மாசடையாமல் பாதுகாக்கவும் வேண்டும். நீரானது வரையறுக்கப்பட்ட வளமாக இருப்பதனால் எமது எதிர்கால சந்ததியினருக்கும் நாம் அதனை கையளிக்கவேண்டும். எனவே நாம் நீரைச் சிக்கனமாகவும் பாதுகாப்பாகவும் பயன்படுத்த வேண்டும்.



**செல்வி அ. அக்ஷயா**

**தரம் 5**

**யா / நாகேஸ்வரி வித்தியாசாலை**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விடுகதைகள்

✍ தொப்பென்று விழுந்தான் தொப்பி கழன்றான் அவன் யார்?

**பனம்பழம்**

✍ மழை காலத்தில் குடை பிடிப்பான் அவன் யார்?

**காளான்**

✍ மண்ணுக்குள்ளே பொன் அது என்ன?

**மஞ்சள்**

✍ வெயிலில் மலரும் காற்றில் உலரும் அது என்ன?

**வியர்வை**

✍ கண்ணீர் விட்டு வெளிச்சம் தருவாள் அவள் யார்?

**மெழுகுவர்த்தி**

✍ தாய் குப்பையிலே மகள் சந்தையிலே அவை என்ன?

**நெல்**



**பா.ஜஸ்வின்**

**தரம் 02**

**யா/நாகேஸ்வரி வித்தியாசாலை**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வீதி விபத்துக்கள்

✠ வீதி விபத்துக்கள் நாளுக்கு நாள் அதிகரித்து வருகின்றது.

✠ வீதி விதிகளைப் பின்பற்றாத சாரதிகளால் பல விபத்துக்கள் ஏற்படுத்துகின்றன.

✠ வீதியைக் கடக்கும் போது பாதசாரிகள் மிகவும் எச்சரிக்கையாக இருக்க வேண்டும்.

✠ வீதியை கடக்க விரும்புவோர் மஞ்சள் கோட்டுப் பாதை வழியே கடத்தல் வேண்டும்.

✠ வீதிகளில் கூட்டமாக நின்று கதைத்தல் போக்குவரத்திற்கு தடையாகும்.

✠ வீதி விதிகளைப் பின்பற்றி நடப்பதன் மூலமே விபத்துக்களைத் தவிர்க்கலாம்.




**த. அவதாரணன்**

**தரம் - 02**


**யா/பொஸ்கோ மகாவித்தியாலயம்**







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





இ.பைரவி

தரம் 01

யா/உடுவில் மகளிர் கல்லூரி





செ.சக்சிதா

தரம் 02

யா/ஸ்கந்தவரோதயா ஆரம்ப பாடசாலை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org